


**28. 06. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **கலாச்சாரத்தையும் வளர்ச்சியையும் தழுவி நம்நாடு வேகமாக** முன்னேறி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. **தொலைநோக்கு திட்டங்களால் ஊடக பொழுதுபோக்கு துறை** சிறந்து விளங்குவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

3. **தமிழ்நாட்டில் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் கிராம சாலைகள்** மேம்படுத்தப்பட்டுள்ளதாக மாநிலஅரசு தெரிவித்துள்ளது.

4. **மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து** அதிகரித்து வருவதால் ஓரிரு தினங்களில் நிரம்பும் தருவாயில் உள்ளது.

5. **இந்திய - இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான** முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி நாட்டிங்ஹாமில் இன்றிரவு
7 மணிக்கு நடைபெறுகிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**கலாச்சாரத்துடன் கூடிய வளர்ச்சிப் பாதையில்** நம்நாடு வேகமாக முன்னேறி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஜைன ஆன்மீக தலைவர் ஆச்சார்யா வித்யானந்த்ஜி மஹராஜின் நூற்றாண்டு விழாவில் இன்று உரையாற்றிய அவர், நம்நாட்டின் கலாச்சார மையங்களையும், ஆன்மீக தளங்களையும் அரசு மேம்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

உலகளவில் மிக பழமையான நாடு என்ற பெருமையை நம்தேசம் கொண்டுள்ளது என்று கூறிய பிரதமர், இதற்கு ஆன்மீகத்தலைவர்கள் அடிப்படை ஆதாரமாக இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

நம்கொள்கைகள், அறிவுத்திறன் தத்துவங்கள் அனைத்தும் நிலையானவை என்பதால் நம்நாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தொடர்ந்து எழுச்சியுடன் திகழ்கிறது என்றும் எடுத்துரைத்தார்.

நாட்டின் பழம்பெரும் பாரம்பரிய கலாச்சாரத்தின் கலங்கரை விளக்கமாக ஆச்சார்யா வித்யானந்த் திகழ்வதாக குறிப்பிட்டார்.

அன்னாரை கவுரவிக்கும் வகையில் இந்நிகழ்வில் சிறப்பு அஞ்சல்தலை மற்றும் நினைவு நாணயத்தை பிரதமர் வெளியிட்டார்.

❖❖❖❖❖❖

**பிரதமர் - நரசிம்மராவ்**

**முன்னாள் பிரதமர் நரசிம்மராவின் 104-வது** பிறந்தநாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி அவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சியை வடிவமைத்ததில் நரசிம்மராவின் பங்களிப்பை எடுத்துரைத்த பிரதமர், தேச மேம்பாட்டின் முக்கிய தருணத்தில் அவரது பங்களிப்பிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அன்னாரின் அறிவுக்கூர்மை, திறமை, நிபுணத்துவத்தை பிரதமர் போற்றியுள்ளார்.

❖❖❖❖❖❖

**மன் கி பாத்**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய** வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 123-வது முறையாக நாளைகாலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

அனைத்து வானொலி நிலையங்கள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசை, **Airnews** இணையதளம், **Newsonair** செயலியில் இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பாகும்.

பிரதமர் உரையின் மொழியாக்கம் காலை 11.30 மணிக்கும் இரவு 8 மணிக்கும் இடம்பெறும்.

❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**நாட்டில் ஊடக பொழுதுபோக்குத்துறை பிரதமர்** திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு திட்டங்களால் சிறந்து விளங்குவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

படைப்பாற்றல் திறன், கொள்கைகள், பங்களிப்பு தொடர்பான மின்னணு பொழுதுபோக்கு உச்சிமாநாட்டில் தாம் பங்கேற்றதை சுட்டிக்காட்டியஅவர், பொழுதுபோக்கு துறையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இத்தகைய மாநாடுகள் முக்கிய பங்குவகிப்பதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**ஜல்சக்தி**

**விவசாய தேவைகளுக்கான நீர் பயன்பாட்டிற்கு மத்திய அரசு** வரி விதிக்கும் என்று வெளியாகும் செய்திகள் தவறானது என்று மத்திய ஜல்சக்தி அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

நீர் மேலாண்மை மேம்பாடு மற்றும் நவீனமய திட்டத்தின் கீழ் விவசாய பயன்பாட்டிற்கான நீருக்கு மத்திய அரசு வரி வசூலிக்கும் என்று வதந்திகள் நிலவி வருவதாகவும், அவை உண்மைக்கு புறம்பானவை என்றும் தெளிவு படுத்தியுள்ளது.

விவசாயம் மற்றும் நீர் பயன்பாடு மாநில அரசின் பொறுப்பின் கீழ் உள்ளது என்றும் ஜல்சக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

**மின்னணு வாக்குப்பதிவு**

பீஹார் மாநிலத்தில் மின்னணு வாக்குப்பதிவு மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இன்று தேர்தல் நடைெறுகிறது.

நாட்டிலேயே கைப்பேசி மூலம் வாக்குப்பதிவு செலுத்தும் முதல் மாநிலமாக இதன்மூலம் பீஹார் உருவெடுத்துள்ளது.

40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் மின்னணு செயலி மூலம் இதுவரை தங்களது வாக்குகளை பதிவு செய்துள்ளனர்.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணிவரை நடைபெறும் நிலையில், மின்னணு செயலி மூலம் வாக்களிப்போர் வாக்குபதிவு செய்ய பிற்பகல் ஒருமணி வரை அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

நாட்டின் வரலாற்றில் இது முக்கியத்தருணம் என்று கூறியுள்ள அம்மாநில தேர்தல் ஆணையம், வாக்குச்சாவடிகளுக்கு நேரில் வந்து வாக்களிக்க இயலாதவர்களுக்கு இம்முறை பெரிதும் பயனளிக்கும் என்று கூறியுள்ளது.

மூத்த குடிமக்கள், கர்பிணிகள், மாற்றுத்திறனாளிகள், நோயாளிகளுக்கு மின்னணு வாக்கு செலுத்தும் முறை பெரிதும் பயனளிக்கும் என்றும் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மின்னணு வாக்குப்பதிவு முறையால் வாக்காளர்கள் அதிக எண்ணிக்கையில் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வழிகோலுவதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதற்காக பாதுகாப்பு நடைமுறைகளுடன் கூடிய இரண்டு சிறப்பு மின்னணு செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**அரசின் திட்டங்கள்**

**தமிழகத்தில் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில்** 20 ஆயிரம் கிலோமீட்டர் நீள கிராம சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கீழ் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் 2 லட்சம் கனவு இல்ல வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக சென்னையில் இன்று வெளியான அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 500 கோடி ரூபாய் மதிப்பில் 5 ஆயிரம் சிறு பாசன ஏரிகள்,

261 கோடியில் 238 சமத்துவபுரங்கள்,

176 கோடியில், 7 ஆயிரத்து 924 ஊரக நூலகங்கள் புனரமைப்பு உள்ளிட்டவையும் இதில் அடங்கும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் 77 லட்சத்து 37 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டது உள்ளிட்ட பல்வேறு பணிகளால் கிராமப்புறங்களின் முன்னேற்றம் உறுதி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி** திருக்கோவில் கும்பாபிஷேகத்தை பக்தர்கள் கோவில் வளாகத்தில் எங்கிருந்தாலும் தரிசிக்கும் வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்

திருச்செந்தூர் கோவிலை இன்று அமைச்சர் திரு.அனிதா ராதாகிருஷ்ணனுடன் இணைந்து நேரில் ஆய்வுசெய்த அமைச்சர், பக்தர்களின் அடிப்படை வசதிகளுக்கு சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

குடமுழுக்கு முடிந்த பின்னர் ட்ரோன் மூலம் புனிதநீர் தெளிக்கப்படும் என்று கூறியஅவர், குடமுழுக்கு பணிகளை சிறப்பாக மேற்கொள்ள நூற்றுக்கும் மேற்பட்ட அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**ராஜேந்திரன்**

**தமிழகத்தில் அடுத்தமாதம் 18-ம் தேதிமுதல்** செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒருநாள் அம்மன்கோவில் சுற்றுலாசேவை வழங்கப்படவுள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதற்காக சென்னை, மதுரை, திருச்சி, தஞ்சை நகரங்களில் ஆடிமாதம் பிரசித்திபெற்ற அம்மன் திருக்கோவில்களில் தரிசனம் செய்யும் வகையில் சென்னையிலிருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

❖❖❖❖❖❖

**வாட்டர் பெல்**

**தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் மாணாக்கர்** தண்ணீர் அருந்த குறிப்பிட்ட நேரத்தை அனுமதிக்க பள்ளிக்கல்வித்துறை அறிவுறுத்தியுள்ளது.

அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கும் இதற்கான சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இதன்படி காலை 11 மணிக்கும் மதியம் ஒருமணிக்கும் மாணவர்கள் நீர் பருகுவதற்கான வாட்டல்பெல் நேரம் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது.

வரும் வாரத்திலிருந்து இது நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஒன்றியம்** பெண்ணாகோணம் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளியில் இந்திய எண்ணெய் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதி மூலம் புதிதாக கட்டப்பட்ட 2 வகுப்பறை கட்டடங்களை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. S.S. சிவசங்கர் இன்று திறந்துவைத்தார்.

❖❖❖❖❖❖

**அணைகள்**

**கர்நாடக அணைகளில் பெருமளவு தண்ணீர்** காவிரியில் திறக்கப்படுவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 73 ஆயிரம் கனஅடியாக உள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 116.89 அடியை எட்டியுள்ளது.

**.. வாய்ஸ் ..**

அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் தண்ணீரின் அளவு இன்று விநாடிக்கு 26 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**ஒகேனக்கல் காவிரி ஆற்றில்** வினாடிக்கு 78 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

136 அடி கொள்ளளவு கொண்ட முல்லை பெரியாறு அணையும் நிரம்புவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**தமிழிசை**

தேசிய ஜனநாயக கூட்டணி வலுவாகவும், ஒற்றுமையுடனும் உள்ளதாக பி.ஜே.பி. மூத்த தலைவர் டாக்டர் தமிழிசை சவுந்தர்ராஜன் கூறியுள்ளார்.

சென்னை விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பி.ஜே.பி. அஇஅதிமுக கூட்டணி, ஆளும் திமுகவிற்கு பயத்தை ஏற்படுத்துவதாக கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் கட்சி நிர்வாகிகளை சந்திப்பதை விட்டுவிட்டு மக்களை நேரில் சந்திக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தமிழக ஆட்சியில் விளம்பரங்கள் மட்டுமே இடம்பெறுவதாக குறைகூறிய அவர், மாநிலத்தில் போதை பொருட்கள் புழக்கம் அதிகமாக உள்ளதாகவும் குற்றம்சாட்டினார்.

❖❖❖❖❖❖

**முப்படை ஓய்வூதியதாரர்கள்**

திருச்சி ஆயுதபடை மைதானத்தில் முப்படை ஓய்வூதியதாரர்களுக்கான மாபெரும் குறைதீர்க்கும் முகாம் நாளைமறுநாள் நடைபெறுகிறது.

திருச்சியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர் திரு.ஜெயசீலன், 200க்கும் மேற்பட்ட அதிகாரிகள் மூலம் ஓய்வூதியம் தொடர்பான குறைகள் உடனடியாக தீர்க்கப்படும் என்றார்.

காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும் இம்முகாமை தமிழகம் முழுவதும் உள்ள பாதுகாப்பு படை ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார்

மேலும் இம்முகாமிற்கு வரமுடியாதவர்களுக்காக அந்தந்த மாவட்டத்தில் 5 நடமாடும் வாகனங்கள் மூலம் குறைகள் நிவர்த்தி செய்யப்படும் என்றார்.

❖❖❖❖❖❖

**திருவள்ளூர் வாய்ஸ்**

**திருவள்ளூர் மாவட்டத்தை நெகிழி இல்லா** மாவட்டமாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

.. **வாயஸ்** ..

❖❖❖❖❖❖

**இருவரி**

**உதகை பொக்காபுரம் அரசு பழங்குடியினர் உண்டு** உறைவிட பள்ளிகளில் தேசிய பழங்குடியின ஆணைய உறுப்பினர் ஜடோத்து உசைன் இன்று அடிப்படை வசதிகளை நேரில் ஆய்வுசெய்தார்.

தொடர்ந்து அவர், 34 பள்ளி மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகை 84 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

**தூத்துக்குடி திரேஸ்புரம் நாட்டுப்படகு மீன்பிடி** துறைமுகத்திலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான பீடி இலைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட ஃபைபர் படகை கடலோர காவல்துறையினர் இன்று பறிமுதல் செய்தனர்.

**திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பேரிஜம்** ஏரிப்பகுதியில் முகாமிட்டிருந்த காட்டு யானைகள் அடர்ந்த வனப்பகுதிக்குள் சென்றதையடுத்து மோயர் சதுக்கம், பைன்மரச்சோலை, தொப்பித்தூக்கி பாறை உள்ளிட்ட அனைத்து சுற்றுலா தளங்களுக்கும் பொதுமக்கள் செல்ல மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**ராமநாதபுரம் மாவட்டத்தில் பிரதமரின் மத்திய சம்பத்** யோஜனா திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கான வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து மத்திய குழுவினர் ஆய்வு செய்து வருகின்றனர்.

❖❖❖❖❖❖

**மகளிர் கிரிக்கெட்**

**இந்திய - இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு** இடையிலான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி நாட்டிங்ஹாமில் இன்றிரவு
7 மணிக்கு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖